**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**இரண்டாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**மே, சூன் – 2014**

**P202 சமயத் தமிழ் இலக்கியம்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

**(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)**

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. மணிமேகலை எந்தச் சமயத்தைச் சார்ந்த நூல்?
2. திருமந்திரத்தை இயற்றியவர் யார்?
3. தேவார ஏடுகள் எங்குக் கண்டெடுக்கப்பட்டன?
4. இறைவனுடன் தோழமை நெறியில் வாழ்ந்தவர் யார்?
5. சீவக சிந்தாமணியை இயற்றியவர் யார்?
6. தமிழில் தோன்றிய முதல் பிள்ளைத் தமிழ் நூல் எது?
7. திருப்புகழின் முதற்பாடல் எது?
8. மதுரைத் திருக்கோயிலின் இறைவி யார்?
9. மாயோன் என்று தொல்காப்பியம் குறிப்பிடுவது எந்தக் கடவுளை?

10. ஆழ்வார்களுள் பெண் ஆழ்வார் யார்?
11. 'வாய்கொண்டு மானுடம் பாட' விரும்பாத ஆழ்வார் யார்?
12. நாலடியாரை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் யார்?
13. மணிப்பிரவாள நடையில் எழுதப்பட்ட நூல் எது?
14. திரு.வி.க. எழுதிய கிறித்தவக் கவிதை நூல் எது?
15. இசுலாமியத் தமிழ் இலக்கிய வரலாற்றில் காணும் முதல் நூல் எது?

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக.** **(5x3=15)**

1. வள்ளுவம், நச்சினார்க்கினியம் காட்டும் 'இறை' பற்றி எழுதுக.
2. திருமுகப் பாசுரம் பற்றி எழுதுக.
3. மாணிக்கவாசகரின் வாழ்வியல் அற்புதங்கள் யாவை?
4. ஔவையார் எழுதிய நூல்களைக் குறித்து எழுதுக.
5. இரணியன் வதம் அல்லது நரசிம்ம அவதாரம் பற்றிச் சுருக்கி வரைக.
6. திருவிருத்தம் பற்றிக் கூறுக.
7. பௌத்த துறவியரின் பணிகள் யாவை?
8. கிறித்தவச் சிற்றிலக்கியங்களின் முன்னோடிகள் என்று கூறப்படுபவர்களைப் பற்றித் தொகுத்து எழுதுக.

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக.** **(3x15=45)**

1. (அ) சிவனைப் பற்றிக் காப்பியங்கள் கூறுவனவற்றை விவரிக்க.

(அல்லது)

(ஆ) சைவ சமயத்துடன் தமிழும், இசையும் வளர்ந்தமையை நிறுவுக.

2. (அ) தசாவதாரங்கள் குறித்து நீவிர் அறிந்தவற்றை விளக்குக.

(அல்லது)

(ஆ) பன்னிரு ஆழ்வார்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக.

3. (அ) தமிழ் நூல்களில் சமண சமயக் குறிப்புகள் எங்ஙனம் வெளிப்படுகின்றன என்பதை விளக்குக.

(அல்லது)

(ஆ) இசுலாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்களின் வகைகளை விளக்குக.